**முதல் கூடுதல் சார்பு நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.**

2026ம் ஆண்டு ஜனவரி மாதம் 30–ம் தேதி பிரதிவாதி தரப்பு சாட்சி பி.வா.சா.2–ன் வாக்குமூலம் 1989ம்ஆண்டு 19வது விதி ஏற்பாட்டின்படிதிரு.G.அசோக்பிரசாத் B.A.B.L., M.S.E.N., ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

(3ம்வாதி ஆஜர். 1,2 வாதிகள் ஆஜர் இல்லை. 1முதல்7 பிரதிவாதிகள் ஆஜர் இல்லை. 8ம் பிரதிவாதி ஆஜர்.வாதி மற்றும் 1 முதல் 7 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர்கள் ஆஜர் இல்லை. 8ம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)

அ.வ.எண்.756/2018

பி.வா.சா.2 சசிகுமார் த/பெ சண்முகம்

**வாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை :–**

1. வாதிகள் முன்னோரான கருப்பண்ணகவுண்டர் குடும்பம் எனக்கு அறிமுகம் இல்லாதவர் என்றால் சரிதான். 2022க்கு முன்பாக தாவா சொத்தின் இயற்கை அமைப்புகளை பற்றி எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் கிரையம் பெறுவதற்கு முன்பாக தாவா சொத்தை பொறுத்து சுவாதீனத்தை பற்றி எனக்கு தெரியாது.

2. என் மாமனார் கணபதிபாளையம் ஊரை சேர்ந்தவர். இந்த கிரையம் பற்றி முழுவிவரம் தெரிந்தவர் மாமனார் நடராஜன் என்றால் சரிதன். இந்த தாவா சொத்து சம்மந்தமாக பி.வா.சா.5 ஆவணத்தில் உள்ள சொத்தை கிரையம் பேசியது மற்ற நடவடிக்கைகள் அனைத்தும் என் மாமனாருக்கு தான் தெரியும் என்றால் சரிதான். நான் வெளிநாட்டில் தான் இருந்தேன். பொதுவாக அரசு வழிகாட்டு மதிப்பு வேறு சந்தைமதிப்பு வேறு என்றால் சரிதான். கிரைய பத்திரம் அரசு வழிகாட்டுதழின் பெயரில் தான் எழுதப்படும் என்றால் சரிதான். அரசு வழிகாட்டின் மதிப்பைவிட சந்தை மதிப்பு அதிகம் என்றால் சரிதான்.

3. பி.வா.சா.5 ஆவணமானது எனது பெயரில் அரசு வழிகாட்டுதாலின் பெயரில்தான் எழுதப்பட்டது என்றால் சரிதான்.பி.வா.சா.5 ஆவணத்தில் முதல்தாளில் பின் பக்கத்தின் குறிப்பில் குறைவு மதிப்பு கட்டணம் கூடுதல் கட்டணம் கட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி என் மாமனாருக்கு தான் தெரியும் எனக்கு நேரடியாக தெரியாது. பாகப்பிரிவினை அடிப்படையில் தன் கிரையம்பெற்றோம் அதற்கு முன்புள்ள ஆவணங்கள் எனக்கு தெரியாது. முன்புள்ள ஆவணங்கள் தற்போதைய தேதிவரை பார்த்து தெரிந்துகொள்ளவில்லை.

4. பி.வா.சா.1 தன்னுடைய சாட்சியத்தில் 7,8 பிரதிவாதிகள் தாவா சொத்தை கிரையம்பெற்றுக் கொண்டு இந்த வழக்கை நாங்கள் பார்த்துக்கொள்கிறோம் என்று கூறியுள்ள விவரம் தெரிந்துகொண்டேனா என்றால் சரிதான். இந்த வழக்கு 2018ல் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பதை தெரிந்துகொண்டேன். பிரதிவாதிகள் வழக்கு இருப்பதை மறைத்து வாதிகளை தவிர்த்து 2020ம் ஆண்டு ஒரு பாகப்பிரிவினை ஏற்படுத்திக்கொண்டார் என்று தெரிந்துகொண்டேன். 2020ம் வருடம் பாகப்பிரிவினை செல்லாது என்று வாதிகள் வழக்கை நடத்தி வருகிறார்கள் என்ற விவரம் தெரிந்துகொண்டேனா என்றால் என்னை இந்த வழக்கில் தரப்பினராக சேர்த்தபின்னர்தான் தெரிந்துகொண்டேன்.

5. பி.வா.சா.5 அசல் ஆவணம் பைனாஸ்யில் உள்ளது. அந்த பி.வா.சா.5 ஆவணம் பைனாஸ்யில் உள்ளது என்பதற்கு ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அசல் ஆவணத்தை நீதிமன்றத்தில் ஒப்படைத்தால் போலியான ஆவணம் என்று தெரிந்துவிடும் என்று அசல் ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. வருவாய்துறை ஆவணங்கள் எனது பெயரில் மாற்றப்படவில்லை என்றால் சரியல்ல எனது பெயரில் வருவாய்துறை ஆவணங்கள் மாற்றப்பட்டுள்ளது. மேற்படி வருவாய்துறை ஆவணங்கள் மாற்றப்படவில்லை என்பதால்தான் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

6. இன்றைய தேதிவரை கந்தாயம் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. கந்தாய ரசீதுகள் வீட்டில் உள்ளது. எனக்கு விற்பனை செய்த நபர்களுக்கு உரிமைமூலம் மற்றும் அனுபவசுவாதீனம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. உரிமைமூலம் பற்றி எனக்கு தெரியாது. நான் கிரையம் பெற்ற சொத்து பி.வா.சா.5 ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்தில் சுவாதீனம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. நான் கிரையபெற்ற சொத்தில் வாதிகளுக்கு பங்கு உள்ளதா பாகம்பிரியாத சொத்தை கிரையம்பெற்ற நபராகதான் கருதப்படுவீர்கள் என்று சொன்னால் எனக்கு தெரியாது.

7.எனக்கு கிரையம் கொடுத்த நபர்களுக்கு கிடைக்ககூடிய 2/6 பாகத்தை மட்டுமே முழுமையான பாகப்பிரிவினைக்குபிறகு தான் பெறஇயலும் என்றால் அதை பற்றி தெரியாது. வாதி கோரியுள்ள பரிகாரம் கிடைக்கதக்கது என்றால் எனக்கு தெரியாது. நான் நல்லன்ன கிரையதார அடிப்படையில் பி.வா.சா.5 ஆவணமான கிரைய ஆவணம் அடிப்படையில் நான் நல்லன் கிரையதாரர் இல்லை என்றால் சரியல்ல.

4 முதல் 7 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை என்று கூறிவிட்டதால் பதிவு செய்யப்பட்டது.

1 முதல் 3 பிரதிவாதி தரப்பு குறுக்குவிசாரணை:– இல்லை